ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ அதி விசேஷமானது

අංක 2430/ 17 - 2025 අප්‍රේල් මස 02 වැනි බදාදා - 2025.04.02
2430/17 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 02 ஆந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி மீட்டல் பற்றிய அறிவித்தல்கள்

### காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

39 (1) ஆம் பிரிவின் கீழ் இரத்து செய்தல்

காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 38 ஆம் பிரிவின் காப்புவாசகம் (அ) வின் கீழான கட்டளையில் விபரிக்கப்பட்ட 2021.01.07 ஆந் திகதிய 2209/46 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 2021 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க 2020.12.28 ஆந் திகதிய கட்டளைச் சட்டத்தில் விபரிக்கப்பட்ட காணித்துண்டு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. கீழே விபரிக்கப்பட்ட காணித்துண்டின் இருப்பாட்சி இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சார்பில் இன்னும் பொறுப்பேற்கப்படவில்லை. ஆகையால், கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் குரகமகே தொன் லால் காந்த ஆகிய நான், காணி எடுத்தற் சட்டத்தின் 39 (1) ஆம் பிரிவின் கீழ் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் 2021.01.07 ஆந் திகதிய 2209/46 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 2021 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க 2020.12.28 ஆந் திகதிய இக் கட்டளையை இத்தால் இரத்துச் செய்கிறேன்.

கே.டி. லால் காந்த,
கமத்தொழில், கால்நடை வளங்கள்,
காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர்.

எனது இல.: 4-3/16/2018/UDA/355.
பிரதேச செயலாளர் குறிப்பு இல.: කොළොලේ/ඉඩම්/3/104/UDA.
கமத்தொழில், கால்நடை வளங்கள் காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு,
"மிஹிகத மெதுர",
காணிச் செயலகம்,
இல. 1200/6, இரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2025, மாச்சு 19.

அட்டவணை

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், கொழும்பு பிரதேச செயலாளர் பிரிவில், மோதரை தெற்கு கிராம அலுவலர் பிரிவில் மோதரை (பிரிவு இல. 2 - கொழும்பு மாநகர சபை எல்லையினுள்) கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட 2019.10.14 ஆந் திகதிய, CO/COL/2019/381 ஆம் இலக்க முதற் சுவட்டு வரைபடத்தில் காட்டப்பட்ட பின்வரும் பெயர்கள் விஸ்தீரணங்களைக் கொண்ட காணித்துண்டுகளின் எல்லைகள்:

01. **துண்டு இல. 01 – வரி மதிப்பீட்டு இல. 46 மற்றும் 50 ஸ்ரீபக்ஷ்ஷாநந்த மாவத்தை - விஸ்தீரணம்: 1.7177 ஹெக்டயார்**

வடக்கு: ஸ்ரீ பக்ஷ்ஷாநந்த மாவத்தை ஹேனமுல்ல வீதி மற்றும் ஹேனமுல்ல வீதியின் வரி மதிப்பீட்டு இல. G/60 ஐக் கொண்ட காணி ; கிழக்கு: ஹேனமுல்ல வீதி, ஹேனமுல்ல வீதியின் வரி மதிப்பீட்டு இல. G/60 மற்றும் 18 ஐக் கொண்ட காணி மற்றும் வரி மதிப்பீட்டு இலக்கம் கண்டுபிடிக்க முடியாத டவல சிங்காரம பன்சல பூமிய ; தெற்கு: ஹேனமுல்ல வீதியின் வரி மதிப்பீட்டு இல. 18 ஐக் கொண்ட காணி மற்றும் டவல சிங்காரம வீதியின் வரி மதிப்பீட்டு இலக்கம் கண்டுபிடிக்க முடியாத டவல சிங்காரம பன்சல பூமிய, டவல சிங்காரம வீதியின் வரி மதிப்பீட்டு இல. 15, 80, 82 மற்றும் 84 ஐக் கொண்ட காணி மற்றும் ஸ்ரீ பக்ஷ்ஷாநந்த மாவத்தை வரி மதிப்பீட்டு இல. 42 ஐக் கொண்ட காணி ; மேற்கு: டவல சிங்காரம வீதியின் வரி மதிப்பீட்டு இல. 15, 80, 82 மற்றும் 84 ஐக் கொண்ட காணி, ஸ்ரீ பக்ஷ்ஷாநந்த மாவத்தை வரி மதிப்பீட்டு இல. 42 ஐக் கொண்ட காணி மற்றும் ஸ்ரீ பக்ஷ்ஷாநந்த மாவத்தை.

EOG 04 - 0014